வானத்தை முட்டும் வேள்வியின் அக்னியில்,
மானிடர்கள்அதிலிடும் ஹவிஸ்களையேற்று ।
வானத்தில் உறைகின்ற தேவர்களின் நலம்,
பேணிட என்றும் அருள் புரியஇருப்பவனே ॥ 10.
ஞாலம் என்றும் கெடாமல் நிலையாய்யிருக்க,
வேதமென்ற மரத்தின் ஆணிவேராகயிருக்கும் ।
மூலமந்திரத்தின் உட்பொருளான உன்தனை,
சாதனையாளர்கள் உண்மையாகஅறிகின்றனர் ॥ 11.
கலைகளுக்கு உறைவிடமான எம்பெருமானே,
நிறைவான பெயரும், உருவமும் உலகிற்களித்து ।
இலை உனக்கு நிகரென முடிவில் சேருமிடமாக,
மறைகள் அனைத்தும் புகழ என்றும் திகழ்பவனே ॥ 12.
இளம்பிறை சந்திரனின் உருகிய திரவம் போன்று,
வளம் நிறைந்த அமுதம் போன்ற பாற்கடலின் ।
குளம் போன்று திகழும் உன்தன் திருமேனியை,
உளம் நிறைய தியானிக்கின்றனர் ஞானிகளெல்லாம் ॥ 13.
மனம் என்ற சிறந்த அறிஞர்களின் பொய்கைதனில்,
உறைகின்ற ராஜஹம்ஸபோன்று விளங்கும் உம்மை ।
தினம் உள்ளத்தில் கொண்டு தியானிப்பவர்களுக்கு,
நிறைவான வாக்குகள் தாமே வர உதவுகின்றன ॥ 14.
வெண்மை கிரணங்களில் அடியாரை மூழ்கச்செய்து,
அரைக்கணமாகிலும் நிலையாக தியானிக்கச்செய்து,
உண்மையான தடைசெய்யஇயலாத தம் வாக்குகளால்,
இரையும் ஆகாஸ கங்கையின் வேகத்தைக் குறைக்கின்றன॥ 15.



புண்ணியசாலிகள் உம்தியானஅமுத்தில் நீராடுவதால்,

உயிர்நாடியில் ஓர் இடத்தில் வேறூன்றி நிலைத்து ।

நுண்ணிய அவயவங்களில் முளைத்து எழுந்திட,

மயிர் கூச்சமென்ற உயர்நிலையை அடைகின்றனர் ॥ 16.

ஆழ்மனதில் உன்னை வைத்துத் தியானிப்பவர்கள்,
உதயகாலச் சந்திரனைக்கண்டு பொங்கியெழுகின்ற ।
ஆழ்கடலில் தோன்றும் அலைகளைப் போல் தங்கள்,
இதய மகிழ்ச்சியை கண்ணீரால் வெளிப்படுத்துவர் ॥ 17.
வியக்கு வகையில் மனதை உன் வசமாக்கியவர்கள்,
மனவலிமை வளரப்பெற்ற ஞானிகள் போன்று ஆகி ।
மயக்கும் மயில் தோகைப்போன்ற உன்மாயைகளை,
உனதருளால் அவையெல்லாம்வென்று கடக்கின்றனர் 18.
முன்பிறவியில் செய்தத் தவங்களின் பயன்களாலும்,
அடைய முடியாத மோக்ஷத்தையும் தரவல்லவனாய் ।
சிந்தாமணிபோன்று கேட்டதை அருளுபவனானவுனை,
அடையும் முயற்சியையும் நீயே தந்து அருளவேண்டும் ॥ 19.
எழுதிய எழுத்தையும் மாற்ற வல்ல வல்லமையுள்ள,
இந்திரன் முதலிய அனைத்து தேவர்கள் வணங்குபோது।
விழும் பாத தூளிகள் அவர்கள் சிரஸில் விழுதல்போல்,
என் சிரஸிலும் படிந்து அடியேனுக்கு அருள்புரியட்டும் ॥ 20.
தினகரனைக்கண்டவுடன் இருள் விலகுவதேப் போன்று,
உம்சலங்கையொலிகளால் மன இருள் அகல்கின்றது ।
தினம் மலரும் தாமரை மலர்போன்ற நின் பாதங்களை,
எம்முள்ளத்தில் வைத்து இடையறாது தியானிக்கின்றோம் ॥ 21.
நாதம் எழுப்பும் உன்தன் அழகிய ரத்ன சதங்கைகளைச்
சாற்றிக் கொண்டு அடியவர்கள் அலங்கரித்துக் கொள்ள ।
வேதவாக்குகளை பல்வேறு கல்பங்களிலும் அவர்களை,
போற்றிக் காக்கும் சிறந்த பெட்டகங்களாக நம்புகின்றோம்॥ 22.